2010 மே 6]

150—

மீன்பிடித் துறைமுகம்

***58525—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, காவிரிப்பூம்பட்டினம் ஊராட்சி, பூம்புகார் மீனவர் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ளது.

(ஆ மீன்பிடித் துறைமுகம் அமைக்க சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று பெறப்பட்டவுடன், மத்திய, மாநில அரசுகளின் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு ஆணை பெற்று, பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணி துவங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.*

திரு. மு.க. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் துறைமுகம் என்பது தமிழ்நாட்டினுடைய பண்டைய துறைமுகம் என்பது மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய முதல் துறைமுகம் என்றும் அறியப்படுகிறது. சோழ மன்னர்கள் தலைநகராகக்கொண்டு ஆண்ட அந்தத் துறைமுகத்திற்கு, துறைமுகப்பட்டினம் என்றும் ஒரு பெயர் இருக்கிறது. நமது புகழ்பெற்ற பட்டினத்தார் அடிகள் கப்பல் வைத்து வாணிபம் செய்த வரலாறும் இருக்கிறது. ஆக, இப்படிப்பட்ட அந்த இடத்தில் மீன்பிடித் துறைமுகம் வேண்டுமென்று ஒவ்வொரு கூட்டத் தொடரிலேயும் நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். மத்திய அரசு தடையில்லாச் சான்று கொடுத்தவுடன் தொடங்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 6

அவர்கள் பதில் சொல்கிறார்கள். நமது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், அங்கே நிஷா புயலையடுத்து, வெள்ள நிவாரணத்தைப் பார்வையிட வருகை தந்தபோதும், அதேபோன்று சுனாமி குடியிருப்புகளைத் திறப்பதற்கு வருகை தந்தபோதும் அங்கிருக்கின்ற மீனவ மக்கள் அவர்களிடத்திலே மிகப் பெரிய வேண்டுகோளாக இதைத் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறைமுகம் வரவேண்டிய அவசியம் என்னவென்றால், 18 கிராமங்களிலே 18 ஆயிரத்திற்கும் மேலாக மீனவ மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மு.க. பெரியசாமி: இவர்கள் ஆறு மாதங்கள் மீன்பிடித் தொழில் செய்கிறார்கள். மற்ற ஆறு மாதங்களில், இயற்கைச் சீற்றத்தினால் இவர்களுடைய 250 விசைப் படகுகள், 1,000 fibre glass படகுகள் எல்லாம் நிறுத்தி வைப்பதற்காக ஒன்று, பழையாறுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது; இல்லையென்றால் ஜெகதாபட்டினத்திற்குச் செல்ல வேண்டியிருக்கிறது. இன்றைய காலகட்டத்தில் அங்கே படகுகளை வைப்பதற்கு இடம் இல்லாமல் அங்கே வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய மீனவர்களோடு மிகப் பெரிய சண்டையும், பூசலும் வருகின்றது. ஆகவே, இவர்கள் தொடர்ந்து தொழில் செய்வதற்கு அந்த மீன்பிடித் துறைமுகத்தை அரசு அமைத்துத் தருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற, நாகை மாவட்டத்தில் இருக்கின்ற பூம்புகார் மீனவர் கிராமம் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க மீனவர் கிராமமாகும். தமிழகத்தினுடைய வரலாற்று முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி கற்புக்கரசி கண்ணகியினுடைய கவின்மிகு கலைக்கூடம் அங்கு அமைத்ததுடன் அந்தப் பகுதியிலே வாழக்கூடிய பூம்புகார்

2010 மே 6]

மீனவ மக்களுக்கு மட்டுமல்லாமல், சுற்றியிருக்கின்ற மீனவ கிராம மக்களுக்கும் குடியிருக்க வீடுகள், விசைப் படகுகள் என்று பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கிச் சிறப்பித்தார்கள். நம்முடைய முதல்வர், ஐயா கலைஞர் அவர்கள் பூம்புகாரின்மீது தனிக் கவனம் உள்ளவர் என்பதனை இந்த மாண்புமிகு அவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாகை மாவட்டம், பூம்புகார் மீனவர் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. அத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக சென்னை தேசிய கடல்சார் தொழில்நுட்பக் கழகத்தின்மூலம் மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, இறுதி அறிக்கை பெறப்பட்டுள்ளது. மீன்பிடித் துறைமுகம் அமையப்பெறும் நிலம் வரலாற்றுச் சின்னங்கள் அமைந்துள்ள இடமாகக் கருதப்படுவதால், அந்நிலத்தில் புராதனச் சின்னங்கள் இருக்கின்றனவா என்பது குறித்து தொல்லியல் துறையினரால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மேலும் துறைமுகம் அமையப்பெறும் கடற்பரப்பில், கடல் தொல்லியல் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. அந்த ஆய்வறிக்கையில், பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப்படவுள்ள இடத்தில் புராதனச் சின்னங்கள் ஏதுமில்லை என்று தெரிவிக்கப்பட்டு, அதன்படி சுற்றுலா மற்றும் கலைப் பண்பாட்டுத் துறையினரால் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் இந்தியத் தொல்பொருள் அளவை நிறுவனத்தின் ஆழ்கடல் ஆய்வுப் பிரிவின் ஒப்புதல் பெறவும், மத்திய சுற்றுச்சூழல் துறையிடமிருந்து தடையில்லாச் சான்று பெறவும் தமிழக அரசின்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடையில்லாச் சான்று பெறப்பட்டவுடன், மத்திய, மாநில அரசுகளின் நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு ஆணை பெற்ற பின்னர் தமிழக அரசு பூம்புகாரில் சுமார் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் நிறுவ இருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, நன்றியை மட்டும் சொல்லி உட்காருங்கள்.

திரு. மு.க. பெரியசாமி: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பழையாறு முதல் தரங்கம்பாடி வரை 30 மீனவ கிராமங்கள் இருக்கின்றன. மீனவர்கள் தங்களுடைய நலத் திட்ட உதவிகளைப்

பெறுவதற்கு நாகப்பட்டினத்திற்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. மீனவ மக்களுடைய வாழ்வாதாரத்தையும், அவர்களுடைய பொருளாதாரத்தையும் உயர்த்துவதற்காக கடல்சார் மீனவர்களின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எடுப்பதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, பத்தாண்டுகளுக்கு முன்னாலே பழையாற்றிலே இயங்கி, மூடப்பட்ட மீன்வளத் துறை உதவி இயக்குநர் சார்பு அலுவலகத்தைப் பூம்புகாரிலே தொடங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. *(குறுக்கீடுகள்)*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-35

2. தகவல் கோரல்

(அ) கோவை, ஈரோடு மாவட்ட திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் கட்டடத்திற்குள் சென்ற ம.தி.மு.க.வினர் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எல்லோரும் முன்னறிவிப்புக் கொடுத்துள்ள விஷயத்தைத்தான் நான் எடுக்கப் போகிறேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகளைத்தான் எடுக்கப் போகிறேன். உட்காருங்கள். வேலூர் மாவட்டம், வாணியம்பாடி, கச்சேரி ரோட்டில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையின் கழிவு நீர்த் தொட்டியில் (குறுக்கீடுகள்) அதற்கு நேற்றே நான் disposal கொடுத்துவிட்டேன். திரும்பவும் ஏன் raise பண்ணுகிறீர்கள்?